பட்டுச் சாறிகள்
டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
ரியவர்களுக்கும் புதிய
சைன் புடைவைகளை
தெரிவு செய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

மனமிசைந்து ஏனி மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 15 வியாழக்கிழமை (01 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 05

# மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் நத்தாருக்கு முன்னர் ஆரம்பம்!

## அமைச்சர் தர்மசிறி அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 1

விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்கள் இம்மாத இறுதிக்குள் — அதாவது நத்தாருக்கு முன்னர் — நடைபெறும்.

தகவல், சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுகளை நடத்துவது குறித்து அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் சேனநாயக்க குறிப்பிட்டார்.

நாம் மிகவும் நம்பிக்கையுடன் சமாதானத் தேடலை அணுகவுள்ளோம். என்றார் அவர்.

''விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படையான போக்கை கடைப்பிடிப்பாரா?''— என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு—

''ஜனாதிபதி அமைச்சரவையைக் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானங்களை எடுத்து வருகின்றார். முன்னைய ஜனாதிபதி போன்று எதேச்சாதிகாரமாக அவர் நடந்து கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கால அட்டவணை இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஆயினும் பெரும்பாலும் இவ்வருட இறுதிக்கு முன்பதாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்''— என்று அமைச்சர் தெரிவித்தார்.

அரசுக்கும் புலிகளுக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு நிலையங்களில் இன்று முதல் பரிசோதனை

### தமிழீழ சுகாதாரப் பகுதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 1

உணவு உற்பத்தி நிலயங்களை இன்று முதல் பரிசோதனை செய்வதற்கு தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக உணவு நிலைய உரிமையாளர்களுக்கு அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''தமிழீழத்தில் பரவிவரும் தொற்று நோய்களைத் தடுக்கும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக, விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவின் தமிழீழ சுகாதாரப் பகுதியினர் தமிழீழ மக்களின் நலன்கருதி, யாழ். குடாநாட்டில் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் முகமாக, உணவு உற்பத்தி, தயாரிப்பு பதனிடும், பொதியிடும் அல்லது களஞ்சியப்படுத்தும் சகல நிலையங்களையும் இன்று முதல் பரிசோதனை செய்யத் தீர்மானித்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முதனிலைத் தேர்வு முடிவுகள்:

## ஆனைப்பந்தி, யாழ்இந்து மாணவர்கள் முன்னணி!

யாழ்ப்பாணம், டிச 1

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் — இந்த ஆண்டு நடத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு இறுதித் தேர்வான — தமிழீழ முதனிலைத் தேர்வுக்கான — பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன.

பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு கல்விக்கோட்டப் பணிமனைகளூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பளைக் கல்விக்கோட்டத்திலும் நடைபெற்ற இத்தேர்வில் 15 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர்.

இத்தேர்வில் நல்லூர் கோட்டம் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜோ. சிவராமசர்மா 500க்கு 476 புள்ளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சை:

## ஒரு தொகுதி வினாத்தாள் விமான மூலம் வந்தது!

யாழ்ப்பாணம், டிச. 1

எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சைக்கான — முதல் ஐந்து நாள்களுக்குமான — வினாத்தாள்கள் நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

பலாலிக்கு விமான மூலம் எடுத்துவரப்பட்ட வினாத்தாள்கள் காங்கேசன்துறையூடாக குமண கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு நேற்று மாலை எடுத்து வரப்பட்டன.

அவற்றை கல்வித் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் எடுத்து வந்தனர்.

அடுத்த தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-4-173)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்: பொஸ்கோ, யாழ் இந்து முன்னணி!

யாழ்ப்பாணம், டிச. 1

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில்—

சென். ஜோன் பொஸ்கோ', யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் முன்னணிப் பெறுபேறுகள் பெற்றிருப்பதாக திருகோணமலையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வழமையாக சிறப்புப் பெறுபேறுகளைப் பெறும் பாடசாலைகளில் ஒன்றான உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்து 'ஆரம்பப் பாடசாலை போன்றவற்றின் பெறுபேறுகள் பற்றிய விவரம் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

நேற்றுக் கிடைத்த செய்தி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா, காமினி ஆதரவு குழுக்கள் ரணிலுக்கு எதிராக போர்க்கொடி!

### ஐ. தே. க. மீண்டும் பிளவுபடும்

கொழும்பு, டிச. 1

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள பிரமேதாஸா, காமினி திஸாநாயக்கா ஆகியோரின் ஆதரவுக் குழுக்கள் ஒன்று சேர்ந்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொடி உயர்த்தியிருப்பதாகவும்—

இதனால் கட்சிக்குள் பிளவு ஏற்படும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

காமினி, பிரேமதாஸா ஆதரவாளர் குழுவுக்கு முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க தலைமை வகிக்கின்றார். அவருக்குப் பக்கபலமாக முன்னாள் அமைச்சர்களான விஜேபால மெண்டிஸ், அனுரா பண்டாரநாயக்கா, டிரோன் பெர்னாண்டோ, மற்றும் முன்னாள் சபாநாயகர் எம். எச். முகம்மது, சரத் அமுனுகம, திலக் கருணாரத்ன போன்றோரும் வடமத்திய, ஊவா, வடமேல், சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர்களும் முழு ஆதரவு தந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரணிலுக்கு எதிராக பலம் வாய்ந்த ஒரு குழு கட்சிக்குள் உருவாகியிருப்பதை அடுத்து—

நாளை மறுதினம் (சனிக்கிழமை) நடைபெறும் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலும், எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் கடும் போட்டி ஏற்படுவதைத் தடுக்கமுடியாது என்றும்—

மீண்டும் ஐ.தே. க. பிளவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சகாவை சுட்டுக் கொன்ற கான்ஸ்டபிள் தற்கொலை!

### வவுனியா நெளுக்குளத்தில் சம்பவம்

கொழும்பு, டிச. 1

இரு றிசேவ் பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு இடையிலான தகராறு ஒன்றை அடுத்து —

ஒருவர் மற்றைய பொலீஸ்காரரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் வவுனியா நெளுக்குளம் பொலீஸ் காவலரண் ஒன்றில் இடம்பெற்றது.

(ஓ-5)

## நேபாளத்தில் கம்யூ. அரசு

காத்மண்டு, டிச. 1

நேபாளத்தின் புதிய அரசை கம்யூனிஸ்ட் கட்சி நேற்று அமைத்தது.

புதிய அரசின் தலைவராகவும் பிரதமராகவும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மன்மோகன் அதிகாரி (74 வயது) பதவியேற்றார்.

(க)

## ஒற்றையாட்சி முறையின் கீழான தீர்வையே இந்தியா விரும்புகிறது!

புதுடில்லி, டிச. 1

★ இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவும் ஒற்றையாட்சி முறையின் கீழ்தான் காணப்பட வேண்டும் என இந்தியா விரும்புகிறது.

★ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றிதான் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆலோசனைகளை வழங்கியிருந்ததாக வெளியான செய்திகளையும் இந்தியா நிராகரித்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. ஸ்ரீநிவாசன் இத்தகவல்களைபுதுடில்லியில் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

சந்திரிகா பிரதமராக இருந்தபோது, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதுபற்றி இந்தியா அவருக்கு ஆலோசனை கூறியது என்று கூறப்படும் செய்தியில் எதுவித உண்மையும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை உட்பட இலங்கையை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இலங்கையின் இறைமை, ஒற்றையாட்சி முறை, பிரதேச கௌரவம் ஆகியவற்றைப் பேணும் விதத்தில் சமாதானமாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் தொடர்ச்சியான கருத்தாக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காணி விற்பனை மோசடி: ஆயிரம் கோடி ரூபா மீட்பு

கொழும்பு, டிச. 1

கடந்த அரசாங்கத்தினால் —மோசடியான முறையில்— விற்கப்பட்ட பெறுமதி மிக்க அரச காணிகளை மீட்டெடுத்ததனால் அரசாங்கத்துக்கு ஆயிரம் கோடி ரூபா லாபம் ஏற்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் கடந்த அரசாங்கத்தினால் தனிநபர்களுக்கும், பல்வேறு நிறுவனங்களுக்கும் விற்கப்பட்ட காணிகளை கடந்த நூறு நாட்களில் புதிய அரசு மீட்டெடுத்துள்ளதாகவும்—

வீடமைப்பு, நிர்மாணத்துறை பொது வசதிகள் அமைச்சரின் பணிப்பின் பேரில் அவரது அமைச்சு எடுத்த நடவடிக்கைகளினாலேயே ஆயிரம் கோடி ரூபா இழப்பை அரசு தவிர்த்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-6)

### அரசைக் கவிழ்க்க சதி செய்தாராம்

## வல்வை வாசிக்கு ஒத்திவைப்பு சிறை

கொழும்பு, டிச. 1

அரசைக் கவிழ்க்க சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வல்வை வாசியான தவராஜா அநந்தவராஜா என்பவருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஜெஸ்லி அபயசேகரா 7 வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

'பி' அறிக்கையின்படி நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இவர் நீதியான் முன் ஆயர் செய்யப்பட்டு விடுதலையாவர்.

20-6-1991க்கும், 30-11-1991க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம், ஊரிக்காடு, மாங்குளம் ஆகிய இடங்களில் வினோத், கமல், ஆனந், அருள், வதனன் ஆகியோருடன் சேர்ந்து அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

துப்பாக்கி வைத்திருந்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மற்றொரு குற்றச்சாட்டும் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

6 8-1993இல் இவர் கைது செய்யப்பட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நாலரைக் கோடி நிலுவையில் ஒருபகுதியான

## 3 கோடி நாற்பது லட்சம் ரூபாவை தொண்டாவின் பேரன் செலுத்தினார்!

கொழும்பு, டிச. 1

எயர்லங்கா நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய நாலரைக் கோடி ரூபா நிலுவையில் 3 கோடி 40 லட்சம் ரூபா பணத்தை இ. தொ. காவின் நுவரெலியா மாவட்ட எம். பியான ஆறுமுகம் தொண்டமானின் தலைமையிலான ஏஜென்ஸி ட்ரான்ஸ் லங்கா செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எஞ்சிய ஒரு கோடி பத்து லட்சம் ரூபா பணத்தைச் செலுத்தும்வரை அந்த நிறுவனம் மீது விதிக்கப்பட்ட— கடன் வழங்குவதற்கான— இடைநிறுத்த உத்தரவு அமுலில் இருக்கும் என்று எயர்லங்கா தலைவர் சேபால ஆட்டிகல தெரிவித்தார்.

மிகுதிப் பணத்தை செலுத்த அமைச்சர் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் நிறுவனத்துக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அரசுடன் ஒத்துழைக்காத அதிகாரிகளுக்கு மாற்றம்

கொழும்பு, டிச. 1

புதிய அரசின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் பின்னடித்து வரும் — அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த — பொறுப்பு மிக்க பதவிகளில் உள்ள — அதிகாரிகள் பலர் தத்தமது பதவிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, வேறு பதவிகளுக்கு மாற்றப்படுவார்கள்.

அரசின் முடிவுகளை செயற்படுத்துவதற்கு வசதியாக — அவசர அவசரமாக — இந்நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் தீர்மானித்திருப்பதாக அரச தரப்பு பேச்சாளர் ஒருவர் கூறினார்.

(உ)

### பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்ப்பு:

## மேஜர் ஜெனரல், 20 அதிகாரிகள் மீது ராணுவ நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு!

கொழும்பு, டிச. 1

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி, அத்தளத்தை அழித்து நிர்மூலமாக்கிய சம்பவம் தொடர்பாக மேஜர் ஜெனரல் ஒருவர் உட்பட [illegible] அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ''ஒப்பரேஷன் தவளை'' என்ற இந்த நடவடிக்கை மூலம் ஸ்ரீலங்காப் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டது தெரிந்ததே.

முழு உலகையும் அதிரவைத்த இத்தாக்குதல் சம்பவத்தை விசாரிக்க முன்னாள் ஐ. தே. க. அரசு இராணுவ விசாரணை மன்றம் ஒன்றை அமைத்திருந்தது.

விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்ட [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொலைச் சம்பவம்; விசாரிக்க ஆணைக்குழு

கொழும்பு, டிச. 1

லலித் அத்துலத்முதலி கொலையுண்ட சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு மூவர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

[illegible] நாயக்கா தலைமையிலான இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜி. பி. எஸ். குணசேகரா, மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் பணிபுரி[illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## உல்லாசப் பயணிகளை கவர சூதாட்ட விடுதிகள்!

கொழும்பு, டிச 1

வெளிநாட்டிலிருந்து பணக்கார உல்லாசப் பயணிகள் ஸ்ரீலங்காவுக்கு வருகை தருவதை ஊக்குவிப்பதற்காக —

புதிய ''கிளப்புகள்'' மற்றும் கஸினோ கிளப்புகள்'' (சூதாட்ட விடுதிகள்) போன்றவற்றை நாட்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக சுற்றுலாப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தகவல் வெளியிட்டார்.

(உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் நோயைத் தடுக்க தமிழரிடம் 'மருந்து உண்டு'

# ஒருவனுக்கு ஒருத்தி என்ற தாம்பத்திய உறவே அது

ஆட்கொல்லி நோயான ''எய்ட்ஸ்'' நோய் உலகெங்கும் இப்போது மிக வேகமாகப் பரவி வருகிறது.

உலக ''எய்ட்ஸ்'' தடுப்பு தினமான இன்று, அந்த நோய் பற்றிய தகவல்களும், அதிலிருந்து தப்புவதற்கும் ஏற்ற வழிவகைகளும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

எய்ட்ஸ் என்பது வைரசுக் கிருமிகளினால் ஏற்படுகின்ற ஓர் பாலியல் நோயாகும். இதில் இரண்டு வகையான வைரசுக்கள் இருக்கின்றன.

★ எச்.ஐ.வி.— I (HIV-I— Human Immuno Deficiency Virus)

★ எச். ஐ. வி. —II (HIV-II) என்பனவாகும்,

ஆனாலும் ஆசியாக் கண்டத்தில் எச். ஐ. வி.-I கிருமியினாலேயே அநேகமானவர்களுக்கு எய்ட்ஸ் ஏற்படுகின்றது.

### பரவுகின்ற முறைகள்

★ இது ஓர் பாலியல் நோயாகும். அதாவது உடலுறவு கொள்ளுவதன் மூலமாகவே ஒருவரிலிருந்து இன்னொருவருக்கும் பரவுகின்றது.

★ 85 சதவீதம் உடலுறவினாலேயே பரவுகின்றது.

★ இதிலும் ஆணிலிருந்து பெண்ணுக்கும், மற்றும் ஒரு ஆண் இன்னொரு ஆணுடன் இயற்கைகு மாறாக உறவு கொள்ளுகின்ற போதும் பரவுகின்றது. மிகக்குறைவாகபெண்ணிலிருந்து ஆணுக்கும் பெண்ணிலிருந்து பெண்ணுக்கும் பரவுகின்றது.

ஏனெனில் எய்ட்ஸை பரப்புகின்ற எச்.ஐ.வி. கிருமிகள் மனிதனுடைய —

— இரத்தம்

— விந்து

— பெண் உறுப்பின் திரவம்

— கருப்பைக் கழுத்தின் திரவம்

— தாய்ப்பால் என்பவற்றில் செறிவாக இருக்கும்.

★ போதைப்பொருள்களை ஊசி மூலம், அதுவும் சுத்தம் செய்யாமல் ஒரே ஊசியை பலர் பயன்படுத்துகின்ற போது ஒருவருக்கு எய்ட்ஸ் இருந்தால் அவருடைய இரத்தத்திலிருந்து கிருமிகள் ஊசி மூலமாக மற்றவருக்குப் பரவும்.

★ எய்ட்ஸ் நோயுள்ளவரிடம் இருந்து இரத்தம் தானமாகப் பெற்று இன்னொரு நோயாளிக்கு ஏற்றுகின்ற போது, அவருக்கு எய்ட்ஸ் ஏற்படும். இதனாலேயே வெளிநாடு சென்று திரும்பியவர்களிடம் குறைந்தது பத்து வருடங்களுக்கு இரத்தம் தானமாகப் பெறப்படுவதில்லை.

★ பெண்ணுக்கு எய்ட்ஸ் இருக்குமாயின் அவள் கர்ப்பவதியானால் தொப்புள் நாணூடாகவும் (Trans Placental) குழந்தை பிறக்கின்ற போது தாயின் பிறப்புக் கால்வாயிலிருந்தும், தாய்ப்பாலூட்டுகின்றபோதும் பிள்ளைக்கு எய்ட்ஸ் ஏற்படும்.

★ ஆனாலும் எய்ட்ஸ் நோயாளியைப் பராமரிப்பவர்களுக்கோ, ஒரே உணவு, உடைகளைப் பயன்படுத்துவதனாலோ, இருமுகின்ற போது வெளிவரும் காற்றினாலோ, முத்தமிட்டாலோ, கண்ணீரைத் துடைத்தாலோ எய்ட்ஸ் பரவாது.

### பாதுகாப்பு சக்தி இல்லாது போய்விடும்

எமது உடலில் இயற்கையாகவே நோய்களை எதிர்த்துப் போராடுகின்ற பாதுகாப்புச்சக்தி (Immune System) இருக்கின்றது. இதனை உடலின் 'காவல்துறை' எனலாம். இதில் இரண்டு வகையான பாதுகாப்பு கலங்கள் இருக்கின்றன.

★ L – Lymphocytes—20%

★ T – Lymphocytes —80%

இந்த எய்ட்ஸ் வைரசுக் கிருமிகள், 80 சதவீதமான T – லிம்போசைற்ஸ் கலங்களைப் படிப்படியாக, ஆனால் முற்றாக அழித்துவிடும். இதனால் உடலின் 'பாதுகாப்புச் சக்தி' முற்றாக அற்றுப்போய் விடும்.

இதனால் உடலின் பாதுகாப்புச் சக்தி பலமாக இருக்கின்றபோது எமது உடலை நெருங்கவே பயப்படுகின்ற கிருமிகள் கூட, பெருங்கொண்டாட்டத்துடன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம்மைத் தாக்கும். உதாரணமாக நியூமோனியாக் காய்ச்சல்கள், டி. பி. என்கின்ற காசநோய் மற்றும் வயிற்றோட்ட நோய்கள் என்பன இலகுவில் உண்டாகும். மேலும் சாதாரணமாக ஏற்படுகின்ற தும்மல், இருமல், காய்ச்சல்கூட குணமாவதற்கு நீண்டகாலமும், பிரச்சினைகளும் ஏற்படும். இறுதியில் மரணமே ஏற்படும்.

### அறிகுறிகள்

எய்ட்ஸ் நோய்க்கென்று விசேடமான அறிகுறிகள் இல்லை. ஆனாலும் ஒருவருக்கு எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் எச். ஐ. வி. கிருமிகள்தொற்றி எய்ட்ஸ் நோய்க்குரிய மருத்துவ அறிகுறிகள் ஏற்பட 3 தொடக்கம் 12 வருடங்கள் வரை கூட எடுக்கலாம். இதனால்தான் வெளிநாட்டில் இருந்து வந்தவரிடம் குறைந்தது 10 வருடங்களுக்கு இரத்தம் தானமாகப் பெறப்படுவதில்லை.

★ காய்ச்சல் இடைவிடாமல் இரண்டு மாதங்களுக்கு அதிகமான காலத்துக்கு தொடர்வது.

★ அடிக்கடியும் கடுமையாகவும் வயிற்றோட்டம் நீண்டகாலத்திற்குத் தொடர்வது.

★ உடல்நிறை குறைவது. ஏறக்குறைய உடலின் நிறை பத்து சதவீதத்தால் குறைவது.

★ மற்றும் களைப்பு, இளைப்பு, சோர்வு, அலுப்பாக இருத்தல் என்பன.

★ உடலிலுள்ள நிணநீர்க் கலன் தொகுதிகளெல்லாம் வீக்கமடையும்.

உதாரணமாக கைஇடுக்குகள், கழுத்துப் பகுதிகள், தொடை இடுக்குகள், வயிற்றுப் புறப்பகுதி என்பவற்றில் வீக்கங்கள் அல்லது கட்டிகள் என்பன ஏற்படுவது.

★ ஈரலும், மண்ணீரலும் வீக்கமடைவது.

★ தலைமுடி உதிர்வது.

★ வாயில் புண்கள், அவிசல்கள் ஏற்படுவது.

★ கடுமையான இடைவிடாத தலையிடி.

★ கடுமையான மனக்குழப்பம், ஞாபகமறதி ஏற்படுதல்.

இவை எயிட்ஸ் நோயின் அறிகுறிகள்.

### எயிட்ஸின் வரலாறு

1981 ஆம் ஆண்டின் கோடை விடுமுறையில் அமெரிக்காவில் நியூயோர்க், சான்பிரான்சிஸ்கோ, லொஸ் ஏஞ்சல்ஸ் போன்ற நகரங்களில் கட்டுப்பாடற்ற பாலியல் உறவுகள், தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டவர்கள் 159 பேருக்கு கடுமையான நியூமோனியாக் காய்ச்சலும், தசைநார்களில் ஏற்படுகின்ற கட்டிகளும், புற்றுநோயும் ஏற்பட்டன. ஆய்வுகளிலிருந்து 1979 ஆம் ஆண்டிலும் அமெரிக்காவில் இது ஏற்பட்டது தெரியவந்தது. அடுத்த ஆறுமாதங்களில் இது மேலும் இரண்டு மடங்காகியது. இந்தப் புதிய வியாதிக்கு 'எய்ட்ஸ்' (Aids-Auto Immune Deficiency Syndrome) என பெயரிட்டார்கள். ஆனாலும் இது 1970 இன் நடுப்பகுதியில் மத்திய ஆபிரிக்காவில் தோன்றியதாகவும், அங்கிருந்து கறுப்பர்கள் ஹெயிட்டித்தீவுகளுக்கு (Haiti) தொழிலுக்காக குடியேறியபோது அங்கு பரவியதாகவும் கருதுகின்றார்கள்.

அமெரிக்கர்களுக்கு குறிப்பாக கட்டுப்பாடற்ற பாலியல் உறவுப் பிரியர்களுக்கும், தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கும் ஹெயிட்டித் தீவுகள் ஓர் உல்லாசபுரியாகும். எனவே அங்கு ஏராளமாக சென்று திரும்பிய அமெரிக்கர்களாலேயே அமெரிக்காவிற்கு 'எயிட்ஸ்' வந்ததாகக் கருதுகின்றார்கள்.

1981 இல் 159 பேருக்கு ஏற்பட்ட 'எயிட்ஸ்', 1994 இன் முற்பகுதியில் உலகில் 187 நாடுகளில் எட்டரை லட்சம் பேருக்கு பரவியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் கூறுகின்றது. ஆனாலும் முப்பது லட்சம் பேர் வரை இது வரையில் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களாம். எச். ஐ. வி. கிருமிகள் ஏறக்குறைய ஒன்றரைக் கோடி பேருக்கு தொற்றியிருக்கிறதாம். இதில் ஆசியாவில் மாத்திரம் இருபது லட்சம் பேருக்கு இந் நோய் கண்டிருக்கிறது.

2,000 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இதன் எண்ணிக்கை நான்கு கோடியாகும். இதில் ஆசியாவில் மாத்திரம் ஒரு கோடி பேருக்கு 'எய்ட்ஸ்' ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

இதிலும் இந்தியா, தாய்லாந்து, ஹொங்ஹொங், பிலிப்பீன்ஸ், கொழும்பு ஆகிய இடங்களில் பெரும் எண்ணிக்கையானோரும் 'எய்ட்ஸ்' ஏற்படுமென்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

### தவிர்ப்பதற்கு சில ஆலோசனைகள்

எய்ட்ஸ் வியாதியில் உள்ள அம்சம் என்னவென்றால், ஏனைய தொற்றுவியாதிகளைப் போன்று இது நாம் சுவாசிக்கின்ற காற்றினாலோ, குடிக்கின்ற நீரினாலோ, உண்ணுகின்ற உணவின் மூலமாகவோ ஒருவருக்கு ஏற்படாது. கட்டுப்பாடற்ற பழக்கவழக்கம், கண்டவர்களுடன் உடலுறவு, விபச்சாரம், இயற்கைக்கு மாறான தன்னினச் சேர்க்கை, போதைப்பொருள் பாவனை போன்ற செயற்பாடுகளினாலேயே ஏற்படும்.

மேலும் இது உடலுறவுடன் சம்பந்தப்பட்ட பாலியல் வியாதி என்பதனால் 15 வயதிற்கும் 40 வயதிற்கு மிடைப்பட்ட வயதினரையே பெருமளவில் பாதிக்கின்றது.

ஒரு சமூகத்தினதும், தேசத்தினதும் முக்கியமான உழைப்பாளிகளாக, தூண்களாக நிற்பவர்கள் 15—40 வயதினரே.

எனவே இந்த வயதினருக்கு எய்ட்ஸ் ஏற்பட்டு பலர் நோய் வாய்பட்டு இறந்து போகின்றபோது, முழுச் சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் பேரழிவு ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

எனவே எமது தமிழ்க் கலாசார, பண்பாடுகளுக்கேற்ப ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்கின்ற புனிதமான தாம்பத்திய உறவுடன் வாழ்ந்தால் 'எய்ட்ஸ்' நோயை எமது எல்லைகளுக்குள் ஏறெடுத்தும் பார்க்கவிடாமல் செய்யலாம்.

வெளிநாடுகளிலிருந்து வந்து போகின்றவர்கள் மீது அவதானமாக இருக்க வேண்டும்.

இவர்களுடன் உடலுறவு கொள்ளுவதையோ (கணவன் மனைவி உறவு தவிர்ந்த) இரத்தம் தானமாகப் பெறுவதையோ தவிர்ப்பது நல்லது.

# வெளிநாட்டுக்கு மணப்பெண் அனுப்புவதில் கவனம் வேண்டும்

வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு இங்கு திருமணம் பேசுகின்றபோது, வெளிநாடுகளில் உள்ளவர்களின் 'பழக்கவழக்கங்கள்', 'தொடர்புகள்' பற்றி சம்பந்தப்பட்டவர்கள் விசாரித்த பின்னர் திருமணம் பற்றி முடிவு எடுப்பது நல்லது.

★

வைத்திய கலாநிதி

என். ரமணிகரன்

## விதி சீர்கேடு

வட்டுக்கோட்டை, நவ. 30

வட்டுக்கோட்டை சந்தியிலிருந்து சித்தன்கேணி சந்தி வரை செல்லும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவிற்குக் குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது. இதனால் [illegible] என தெரிய வருகின்றது.


## மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த இலண்டனில் தற்பொழுது தொழில் புரிபவரும் நிரந்தர விசா உடையவருமான 34 வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் மணப்பெண் ஒருவரைப் பார்க்கின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திருமதி இ. தங்கராசா 45, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

[பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்]

(7822)

புதிய

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்திச்சந்தி, யாழ்ப்பாணம்.

### கல்வி ஆண்டு - 1995

ஆண்டு 3 முதல் O/L வரை

ஆரம்பம்: 05 - 12 - 1994

திங்கள் பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| **விஞ்ஞானம்**<br>இரா. செல்வவடிவேல்<br>T. S. குணாளன் | **கணிதம்**<br>S. கிருபாகரன்<br>T. S. குணாளன்<br>K. ரஞ்கி |
| **சமூகக்கல்வி**<br>K. S. முத்துலிங்கம்<br>K. றாபி<br>K. அருந்ததி | **தமிழ்**<br>N. புவனேந்திரன்<br>K. சிவரூபி<br>G. கௌரி |
| **ஆங்கிலம்**<br>P. சௌத்திரி<br>S. சிவராஜா | **வர்த்தகம்**<br>V. N ராஜன்<br>**சமயம்**<br>N. சதீஸ் |

### புலமைப் பரிசில் வகுப்பு (1995)

தமிழ்: சி. குழந்தைவேலு, N. சதிஸ்

கணிதம்: T.S. குணாளன், K. ரஞ்சி

★ புதிய அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்,

(சி-9776)

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்) 411/1, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்) 27, கே. கே. எஸ்- வீதி, கொக்குவில்.

### கல்வி ஆண்டு - 1995

ஆண்டு 4முதல் O/L வரையான வகுப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கணிதம் | — B.P. பாஸ்கரன் | | கணிதம் | — B. P பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — J.J. கொலின்ஸ், N. மகேந்திரன் | | விஞ்ஞானம் | — N. மகேந்திரன், J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | — K.S. முத்துலிங்கம் | | சமூகக்கல்வி | — க. கோபி |
| தமிழ் | — S. கதிர்காமத்தம்பி | | தமிழ் | — S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | — J. மனோரஞ்சன் | | ஆங்கிலம் | — C. சத்தியமூர்த்தி |
| வர்த்தக | — A. விக்கி | | வர்த்தகம் | — T. அரவிந்தன் |
| சமயம் | — K. இராஜலிங்கம் | | சமயம் | — K. இராஜலிங்கம் |

★ O/Lஇற்கு கணிதம் - விஞ்ஞானத்தில் ஆண்டு 9. 10 பாடத்திட்டமும் மீட்கப்படும்.

ஆரம்பம்: 04-12-1994 ஞாயிறு முற்பகல் 9-30

[illegible]

## ஆண்டு 9, 10, 11- விஞ்ஞானம்

யாழ். நகரில்...

வடமராட்சியின் புகழ் பூத்த பிரபல விஞ்ஞான ஆசிரியர்

### திரு. N. மகேந்திரன்

அவர்களின் விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்: 04 - 12 - 1994

ஞாயிறு முற்பகல் 9-30 மணி

எடிசன் அக்கடமி

யாழ்ப்பாணம் - கொக்குவில்

(சி/9774)


# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



## அமரர் நாகநாதர் தியாகராஜா

(ஓய்வுபெற்ற உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளர்)

மண்ணுலகில்: **21-04-1906**

விண்ணுலகில்: **02-11-1994**

பாசத்துடனும், பரிவுடனும் வளர்த்த எம் அன்புத் தந்தையே எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர். நீங்கள் மறைந்தாலும், எம்துயர் ஆறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆண்டவனின் திருவடியை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்த அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (02-12-1994) வெள்ளிக்கிழமை நீர்வேலி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

இல. 30, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(33949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவை காப்பாற்றுமாறு ஜே. ஆரிடம் வேண்டுகோள்

## சஜித் பிரேமதாஸா நேரில் விடுத்தார்

கொழும்பு, டிச. 1
ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுவதில் இருந்து காப்பாற்றும்படி முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் புதல்வர் சஜித் பிரேமதாஸாவே ஜெயவர்த்தனாவிடம் இந்த வேண்டுகோளை நேரில் விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உட்கட்சிப் பூசல் தீவிரமடைந்து வருவதாகக் கூறப்படும் சமயத்தில் சஜித் பிரேமதாஸா கடந்த வாரம் ஜெயவர்த்தனாவை சந்தித்துப் பேசினார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க உடனடியாக விரைந்து செயற்படுமாறும் சஜித் ஜெயவர்த்தனாவை கேட்டுக்கொண்டார் — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ)

# பண்டாரநாயக்கா குடும்ப ஆட்சியில் இடம்பெறும் பாப்பரசரின் விஜயங்கள்

## அழைப்பு விடுத்த ஐ.தே.க. அரசுக்கு அதிர்ஷ்டமில்லை

கொழும்பு, டிச. 1
பாப்பரசர்களின் இலங்கை வருகைகளுக்கும் பண்டாரநாயக்கா குடும்பத்தினர் ஆட்சியில் இருப்பதற்கும் ஏதேனும் தொடர்புகள் உண்டா என்று கேட்கப்படுகிறது.

பாப்பரசர் ஒருவர் இலங்கைக்கு இரண்டாவது தடவையாக அடுத்த ஆண்டு ஜனவரியில் விஜயம் செய்யவிருப்பதை அடுத்து இக்கேள்வி எழுப்பப்பட்டது.

முதல் தடவையாக ஒரு பாப்பரசர் இலங்கைக்கு 4-12-1970இல் விஜயம் செய்தார். பாப்பரசர் ஆறாவது போல் அப்போது விஜயம் செய்தவர் ஆவார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அவருக்கு 1969இல் பதவியில் இருந்த ஐ. தே. க. அரசின் பிரதமர் டட்லி சேனநாயகா அழைப்பு விடுத்தார். எனினும்— பாப்பரசர் இலங்கை வந்தபோது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பதவியில் இருந்தது. பாப்பரசரை வரவேற்றவர் பிரதமர் சிறிமாவோ ஆவார்.

தற்போது இலங்கை வரவுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு ஐ. தே. க. அரசின் சார்பில், முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்கா அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்றே பாப்பரசர் அடுத்த ஜனவரி இலங்கை வருகின்றார்.

ஆனால் பாப்பரசரை வரவேற்கப் போகின்றவர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் சிறிமாவுமே என்பது குறிப்பிடத்தக்கது.

பாப்பரசர்களுக்கு அழைப்பு விடுக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள ஐ. தே. க. அரசுகளுக்கு அவரை வரவேற்று உபசரிக்கும் அதிர்ஷ்டம் இல்லாமற் போய்விடுகிறது. (ஐ-எ)

# அரசமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக எதிர்க்கட்சி எம். பிக்களும் வாக்களிப்பர்

## பிரதமர் சிறிமாவோ நம்பிக்கை

கொழும்பு, டிச. 1
நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக எதிர்க்கட்சியின் சில எம். பிக்களும் எம்முடன் சேர்ந்து வாக்களிப்பர் என்று நம்புகின்றேன்,

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா "சண்டே ரைம்ஸ்"க்கு" அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

அடுத்த ஜூலைக்கு முதல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன் பின்னர் குறைந்த பெரும்பான்மைதான் பொ. ஐ. முக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும். இது ஒரு ஆபத்துத்தான். ஆனால் நாம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாக உறுதி கொடுத்துள்ளோம்.

ஆகவே அரசமைப்பை மாற்றியே ஆக வேண்டும். அதற்கு எதிரணி எம். பிக்கள் சிலரும் எமக்கு வாக்களிப்பர்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ எ)

## ஜி.எம். பிரேமச்சந்திரா மரணம் குறித்து

# விசாரணை நடத்தப்படாவிடின் ஆதரவை விலக்கிக் கொள்வோம்!

## ஐ.தே. கவுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 1
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் ஜி.எம். பிரேமச்சந்திரா கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டது குறித்து உடன் விசாரணை நடத்த ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் —

தவறும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கி வரும் ஆதரவை தாம் விலக்கிக் கொள்ளவேண்டி வரும் என்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த முதலாம் திகதி ஐ.தே.க தலைமைப் பீடத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் ஆனால் பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் ஐ.தே.மு. பொதுச் செயலாளர் காமினி பிரிஸ் தெரிவித்துள்ளார்.

"இவ்விவகாரம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கொடுத்து வரும் ஆதரவை வாபஸ் வாங்குவது பற்றி தீவிரமாக சிந்தித்து வருகின்றோம்" — என்றும் அவர் கூறினார்.

அடுத்த வாரம் கொழும்பில் நடைபெற விருக்கும் முன்னணியின் செயற் குழுக் கூட்டத்தில் இவ்விவகாரம் ஆராயப்பட்டு முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை—
பிரேமச்சந்திராவின் மரணத்தினால் நாடாளுமன்றத்தில் காலியான இடத்துக்கு தம்மை நியமிக்க வேண்டாம் என்று அவரின் மனைவி திருமதி மாலினி பிரேமச்சந்திரா கேட்டுள்ளார். (ஐ-எ)

### புலிகளின் குரல் வானொலியில்

**01 — 11 — 1994**
**வியாழன் இரவு**

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள் — இருதய நோய்க்கான மருத்துவம்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் "குந்தியிருந்தது போதும்" — குறுநாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து— எரித்திரியா ஒரு நாட்டின் உதயம் என்ற நூலிலிருந்து "சுதந்திரத்திற்கான நீண்ட போராட்டம்" எனும் கட்டுரையின் சிலபகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**02—12 — 1994**
**வெள்ளி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 —மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப்பாடல்கள்.
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## நீதிமன்ற சூட்டுச் சம்பவம் குறித்து

# சொத்தி உபாலியின் வாக்கு மூலம் பெற தடை

## பொலீஸ் அதிகாரி முறைப்பாடு

கொழும்பு, டிச. 1
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொத்தி உபாலியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ய சிறைச்சாலை அதிகாரிகள் தம்மை அனுமதிக்கின்றார்கள் இல்லை என்று கொழும்புத்துறைமுகப் பொலீஸ் பொறுப்பதிகாரி, நீர்கொழும்பு பிரதம நீதிவானிடம் முறையிட்டுள்ளார்.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச சம்பவம் தொடர்பாக பாதாள உலகக்குழு ஒன்றின் தலைவரான சொத்தி உபாலியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யும்படி நீதிமன்றம் பொலீஸுக்கு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி தாம் சொத்தி உபாலியின் வாக்கு மூலத்தை பதிவு செய்யச் சென்றதாகவும் சிறைஅதிகாரிகள் அதற்கு அனுமதிக்கவில்லை என்றும் பொலீஸ் பொறுப்பதிகாரி பி. எம். தென்னக்கூன் தெரிவித்தார். உபாலியின் வாக்கு மூலத்தைப் பெற பொலீஸாரை அனுமதிக்கும்படி நீதிவான் சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார். (ஐ-எ)

### யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 1
அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால் மாதாந்தம் நடத்தப்படும் யோகாசனக் கருத்தரங்கு நல்லூர் திவ்ய ஜீவன் சங்க மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிறன்று 3. 30 மணிக்கு நடைபெறும். யோகிராஜன்,கே. ரவீந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

யோகாசன செய்முறை விளக்கமும், பயிற்சியும் இடம்பெறும். (ஐ)

# இடம்பெயர்ந்த மக்களின் வீடுகள் விசமிகளால் சூறை!

குருநகர், டிச. 1
சில்லாலைப் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வீடுகளில்உள்ள பொருள்கள் களவாடப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

வீடுகளின் இரும்புச் சேற்றுக் கனை டிராக்டர் ஒன்றில் குழைகளால் மறைத்து எடுத்துச் சென்ற சிலர் அண்மையில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குழை ஏற்றி வந்த டிராக்டர் சில்லு காற்றுப்போய் நின்ற சமயம் இந்தத் திருட்டு அம்பலத்துக்கு வந்தது

இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளின் கதவுகள் ஜன்னல்கள், மற்றும் மரங்கள் என்பன இவ்வாறு களவாடப்பட்டு வருவதாக இடம் பெயர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-51)

## நீண்டகாலமாக பணிபுரிந்து வரும்

# ஜனாதிபதி செயலக ஊழியருக்கு இடமாற்றம்!

கொழும்பு, டிச. 1
ஜனாதிபதி செயலகத்தில் நீண்டகாலமாக வேலை பார்த்து வரும் உத்தியோகத்தர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். ஓய்வு பெறும் வாய்ப்பும் பலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் காலத்தில் ஜனாதிபதி செயலகத்தில் வேலைக்குச் சேர்ந்தோர் பலர்தொடர்ந்து பிரேமதாஸா, விஜேதுங்கா காலத்திலும் அங்கு சேவையாற்றி வருகின்றனர். அத்தகையோரே இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

இது தொடர்பான முன்னறிவித்தல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. [ஐ]

# ஐ.தே.க. மாநாட்டில் சிலர் குழப்பம்விளைவிக்கக்கூடும்

## ஜே. ஆர். எச்சரிக்கை

கொழும்பு, டிச. 1
இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராக சில கட்டுப்பாடற்ற சக்திகள் குழப்பம் விளைவிக்கக்கூடும்.

— இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அச்சம் வெளியிட்டுள்ளார்.

கடந்த வாரம் தம்மைச் சந்தித்த சஜித் பிரேமதாஸாவிடம் அவர் இதனைத் தெரிவித்ததாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது (ஐ-எ)

### மரம் நடுகை

யாழ்ப்பாணம், நவ 29
யாழ். மாநகராட்சி மன்றத்தின் அனுசரணையுடன் [illegible] கழகத்தினர் யாழ். மடம் வீதியில் கடந்த வாரம் மரங்களை நட்டனர். (க-17)

### சாவகச்சேரியில் பண்டித வகுப்புகள்

சாவகச்சேரிக் கோட்டத்தில் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தொடக்க விருந்த பண்டித வகுப்புகள் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளன.

மற்றைய கோட்டங்களிலே குறித்த திகதிகளில் எவ்வித மாற்றமுமில்லை.

வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் இதனை அறிவித்துள்ளார். (இ)

### போலி ரப்பர் முத்திரை ஒருவர் கைது

கொழும்பு, டிச. 1
கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பதிரானாவின் போலிக் கையெழுத்திலான ரப்பர் முத்திரை ஒன்றை வைத்திருந்த நபர் ஒருவரை கண்டிப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது

அந்த நபரிடம் இருந்து பாடசாலை அனுமதி கோரும் விண்ணப்பபாரங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன. கண்டி கிங்ஸ்வூட் கல்லூரிக்கு அருகில் வைத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டார். (இ-எ)

### முதலிக்குளம் புனரமைப்பு

அராலி, டிச. 1
வட்டு தெற்கைச் சேர்ந்த முதலிக்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஆரிய நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கமநல சேவைத்திணைக் களம் [illegible]

## பாதுகாப்புக் காரணங்களுக்காக

# பாரிய கடற்படைக் கப்பல்கள் காரைநகரில் தரிப்பது நிறுத்தம்!

கொழும்பு, டிச. 1
பாதுகாப்புக் காரணங்களுக்காக பெரிய கடற்படைக் கப்பல்கள் எவையும் காரைநகர் கடற்படைத் தளத்தில் நங்கூரமிட அனுமதிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ பகுப்பாய்வாளர்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டது.

அண்மையில் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அருகில் 50 கிலோ கிராம் வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பீப்பாய் ஒன்றை கடற்படையினர் கண்டுபிடித்தனர் என்றும் —

அதனை அடுத்தே பாரிய கப்பல்கள் எவையும் இத்தளத்தில் நங்கூரமிட்டு நிற்பதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 மாதங்களில் கடற்புலிகள் நான்கு கடற்படைக் கப்பல்களை மூழ்கடித்துள்ளனர்.

கடற்படையின் மிகப் பெரிய போர்க்கப்பல் சாகரவர்த்தனா கற்பிட்டிக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் ஏ 516 போர்க் கப்பலும், பீரங்கிப் படகு ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டன. வெற்றிலைக்கேணியில் ஓஷன் ட்ரேடர் என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

அண்மையில் கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்ட பீப்பாய்க்குண்டு வெடித்திருந்தால், காரைநகரில் அச்சமயம் தரித்து நின்ற சிறு கடற்படைப் படகுகள் எல்லாம் அழிந்திருக்கும் என்றும் —

வட பிராந்திய கடற்படைக் கட்டளைத் தலைமையகமாக செயற்படும் காரைநகரின் இறங்குதுறையும் முற்றாக நாசமாகிபிருக்கும் என்றும் இராணுவ பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். [ஐ-எ]

# கூட்டுறவுப் பணியாளர் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிச. 1
கடந்த செப்டெம்பர் மாதம் நடந்த கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண தரம் மற்றும் முகாமைத்துவ பரீட்சைகளின் முடிவுகள் வடக்கு- கிழக்கு மாகாண கூட்டுறவுக் கல்லூரியால் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைகளில் சித்தி பெற்றோரின் எண்ணிக்கையை யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் வெளியிட்டுள்ளார். அந்த எண்ணிக்கை விவரம் வருமாறு:—

கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரப் பரீட்சையில் முதலாம் பிரிவில் ஒருவர் மட்டுமேசித்தி பெற்றுள்ளார். இரண்டாம் பிரிவில் 10 பேரும், மூன்றாம் பிரிவில் 19 பேரும், 5 பேர் நான சித்தியும் பெற்றுள்ளனர்.

முகாமைத்துவப் பயிற்சிப் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் மூன்று பேரும், மூன்றாம் பிரிவில் 20 பேரும், 7 பேர் நான சித்தியும் பெற்றனர். (ஐ)

## எதிர்க்கட்சித் தரப்பில்

# இரண்டாவதுவரிசையில் அனுராவுக்கு ஆசனம்!

கொழும்பு, டிச. 1
நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் முன் வரிசையில் அமர்ந்து வந்த அனுரா பண்டாரநாயக்காவுக்கு இப்போ இரண்டாவது வரிசையில் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

இது ஏன் என்று கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் சி. வி. குணரத்தினா அவரிடம் கேட்டார்.

இது குறித்து அனுரா — "எனக்கு ஆசனம் வழங்கப்பட்ட விதம் குறித்து என் பழைய நண்பர் காட்டிய அக்கறைக்கு நன்றி"— என்று புன்சிரிப்புடன் பதிலளித்தார். (ஐ-எ)


பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

**1995 ஆம் ஆண்டிற்கான**

# கேள்வி அறிவித்தல்

1. பச்சிலைப்பள்ளிப் பிரதேச எல்லைக்குள் உள்ள பின்வரும் 'சந்தை' இறைச்சிக்கடைகளை 1995 ஜனவரி 1ஆம் திகதி முதல் 31 டிசம்பர் 1995வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 16-12-1994ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச சபையில் கேள்விப் பத்திரப் பணத்தையும், கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்தி 15-12-1994 ஆம் திகதி பிற்பகல் 3 0 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 19-12-1994 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு திறக்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை "விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பி. எ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் நேரிலோ, பதிவுத்தபால் மூலமாகவோ சேர்ப்பித்தல் வேண்டும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 1995 குத்தகைகள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. சித்திகரக் கேள்விக் காரர்கள் கேள்விப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதுடன் சபையின் அவ்வப்போதைய நடைமுறைகளுக்கும் இணங்கிக் கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். போதிய காரணங்களுக்காக கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | பளை பொதுச் சந்தை | 200/- | 500/- | 26,000/- |
| 02. | பளைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 60,500/- |
| 03. | பளைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 3,500/- |
| 04. | முகமாலைச் சந்தை | 200/- | 500/- | 10,000/- |
| 05. | முகமாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 11,000/- |

இ. ஐயாத்துரை,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

பச்சிலைப் பள்ளி பிரதேசசபை,
பிரதேசசபை பணிமனை,
பளை.
1994-11-14

[சி-9772]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

பிறிமா புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (8045)

நல்லின தேசிக்கன்றும், தோடங்கன்றும் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10/- மட்டும். Taste Line Industries [Pvt] Ltd. 14, Seenier Lane, Jaffna. (சி-9745)

**ஏலவிற்பனை**

இன்று 01-12-94 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் பாவித்த துண்டு மரங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
— யாழ். வணிகர் கழகம். (சி-9767)

**பழைய சேலைகள் தேவை**

பாவித்த நைலெக்ஸ் சேலைகள் விலைக்கு வாங்கப்படும். தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2, காங்கேசன்துறை சாலை, கொக்குவில் மற்றும் எமது பிரிவுக் காரியாலயங்கள் சுன்னாகம், பருத்தித்துறை, நாகர்கோயில், பளை, சாவகச்சேரி, பண்டிதர் குடியிருப்பு. [33912]

**இலகு திருமண சேவை**

25 வயது, விசாகம் 1, செவ்வாயற்ற சொந்தக் கடை உரிமையாளருக்கு (யாழ்.) ஏற்ற மணப்பெண் தேவை மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார், கோவிலடி. [33919]

**தேவை**

பிறா தைப்பதற்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. எதிர்பார்க்கும் வேதனத்துடன் விண்ணப்பிக்கவும். மே/பா இல. 724, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [33937]

**யோகக்கலை**

யோகம் பயிலுங்கள். நோயணுகாது. நிறைநாள் வாழுங்கள். யோகக்கலை கைந்நூல் செய்முறைப்படங்கள் கொண்ட தொகுப்பு ரூபா 50/- மட்டுமே. "மில்க் வைற்" (சி-9769)

---

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
விசேட
## மலிவு விற்பனை

**01-12-94** முதல் நடைபெறுகின்றது
காலணி வகைகளும்,
அடப்ப வகைகளும் (Bag)
டி. எஸ். ஐ. பாவனையகம்
281C, இளங்கோ வீதி, (மணிக்கூட்டு வீதி), யாழ்ப்பாணம்.
(8043)

---

**SPOKEN ENGLISH**
**WITH GRAMMAR**
புதிய பிரிவு
ஆரம்பம்: **03 — 12 — 1994**
காலை 8 மணி
ஆசிரியர்: **BRITTO**
புதிய
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[சி 9903]

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 28 | | 15 |
| — | | — |
| 10 | | 12 |
| — | | — |
| 1919 | | 1990 |

அமரர்
**நா. கந்தசாமி [சின்னண்ணை]**
[சிற்றன்னா புத்தகசாலை அன் அச்சகம் உரிமையாளர்]

திதி: 01 — 12 — 1994

விண்ணுலகில் நீங்கள் சென்று மறைந்தாலும்
மண்ணுலகில் நாங்கள் உங்களை மறக்கவில்லை
எண்ணமெல்லாம் உங்கள் நினைவு தான்
பாசமுடன் பழகி நேசமாய் உறவாடி
நீங்காத நினைவுகளை உருவாக்கி
சென்ற உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு அகலாது.

அன்புடன் நினைவு கூரும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (33939)

---

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
**01-12-1994** முதல் **01-01-1995** வரை
## மலிவு விற்பனை
## அம்பாள் வண்ணச் சோலை
(அம்பாள் சாறி சென்ரர்)
இல. 11, சிறப்பு அங்காடி, சுன்னாகம்.
[7821]

---

கல்வியின் கருவூலம் மட்டுமல்ல;
பண்பின் விளைநிலமும் இதுதான்
## யூனிவேர்சல்
**கந்தர்மடம் - யாழ்ப்பாணம்**

ஆண்டுகள் 3 - 11 வரைக்கான
புதிய அனுமதிகளை 5 - 12 - 1994இன் முன்னர்
உறுதி செய்துகொள்ளுங்கள்.

---

கிராண்ட்பாஸ் சம்பவம்:

# விசாரணை குறித்து சிறிமா அதிருப்தி

கொழும்பு, டிச. 1

தமது கணவரின் மரணத்துக்குக் காரணமாக கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு இன்னும் மர்மமானதாக இருக்கிறது என்று சிறிமா திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இக்கொலை பற்றிய விசாரணையில் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி அரசு தமக்கு அறிவிக்கத் தவறிவிட்டது என்றும் அவர் கூறினார். காமினி கொலை ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து தமது குடும்பம் இன்னும் மீளவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ-எ)

---

**SHORT TERM CLASSES**
டிசம்பர் விடுமுறையில்
குறுகிய கால பயிற்சி வகுப்புக்கள்

- ✶ கேக் ஐசிங்
- ✶ சமையற்கலை
- ✶ ஒப்பனைக் கலையும் தலை அலங்காரமும் (Makeup and Hair Dressing)

ஒரு மாதகால வகுப்புக்கள் எதிர்வரும் **05 - 12 - 1994** திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன.
சேர விரும்புவோர்
உடன் தொடர்பு கொள்ளவும்
**YOGI HOME SCIENCE ACADEMY**
71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[சி-9770]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி எலியாஸ் ஞானம்மா**

| மண்ணகம்: | விண்ணகம்: |
|---|---|
| 27 — 05 — 1915 | 01 — 11 — 1994 |

"சீவியத்தில் என்னை நேசித்தவர்கள் என் - மரணத்தின் பின்னும் என்னை மறவாதீர்கள்."

அன்னாரின் விண்ணுலக பிரவேசத்தை இட்டு, இவருடைய ஆத்தும இளைப்பாற்றிற்காக யாழ். றக்கா வீதி, புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (01-12-94) வியாழன் காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் அனைவரையும் அதில் பங்கு பற்றி எம் இல்லத்துக்கு வருமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
A. ஜெயராசா
(காமினி இரும்பகம்)

2/1, மருதடி லேன்,
யாழ்ப்பாணம். (33938)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 07 | | 04 |
| — | | — |
| 07 | | 12 |
| — | | — |
| 1916 | | 1991 |

**அமரர் நல்லதம்பி தம்பிஐயா**
(ஓய்வுபெற்ற விகிதர், காணி அபிவிருத்தி இலாகா)

திதி: 01 — 12 — 1994

அமைதியின் அணிகலனாய், பாசத்தின் பிறப்பிடமாய், அன்பின் உறைவிடமாய் எங்கள் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத்தெய்வமே! மூன்றாண்டு சென்றும், உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகலாதே அப்பா!

உங்கள் ஆத்மா சாந்திபெற கண்ணீர் மல்கி பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
பெறாமக்கள்.

50, புறாடி லேன்,
யாழ்ப்பாணம். (33931)

---

# 200 பிரதேச சபைகளுக்கு அடுத்த ஆண்டில் தேர்தல்

கொழும்பு, டிச. 1

அடுத்த ஆண்டு மே மாதம் நாட்டில் உள்ள 200க்கு அதிகமான பிரதேச சபைகளுக்குத் தேர்தல் நடக்கவிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு புதிய வருடத்தில் சந்திக்கப்போகும் முதல் பலப் பரீட்சை இது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து 10 மாத காலத்தில் பிரதேச சபைத் தேர்தல் நடைபெறும். (இ-எ)

---

கல்விச் சேவையில்
10 ஆவது ஆண்டை நோக்கி.....
**SUBRA - சுப்றா**
கல்வி நிலையம், சித்தன்கேணி.

**புதிய கல்வியாண்டு - 1995**

- ★ பாலர் வகுப்பு முதல் A/L கலை, வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் வரை
- ★ விசேட ஆங்கில வகுப்புக்கள், சட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள் ஆகியன.

**ஆரம்பம்: 05 - 12 - 1994**
திங்கள் நண்பகல் 12-00 மணி

- ★ பல்லாண்டுகள் கல்விச் சேவையில் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவின் திறமையான போதனைகளைப் பெற உங்கள் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
- ★ கடந்த ஆண்டு எமது நிறுவனத்தில் கல்விகற்ற மாணவர்கள் 01-12-94 முதல் 05-12-94 ற்கு முன்னர் வந்து பெயர்களை பதிவு செய்து அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.
- ★ கல்வி நிறுவனத்தில் காலை 8-30 மணி முதல் மாலை 6-00 மணி வரை அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

- நிர்வாகி.

[8048]

---

உ
"நால்வர் பொற்றாளெம் உயிர்த்துணையே"
## பண்ணிசைக் கருத்தரங்கு

இடம்: யாழ். வண்.
நாவலர் மகாவித்தியாலய
கலாமண்டபம்

காலம்: **02-12-1994** பி. ப. 3மணி

**தலைமை:**
"வாகீசகலாநிதி"
கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ. அவர்கள்

**வாழ்த்துரைகள்:**
சங்கீதபூஷணம் இசையரசு
பேரா. சந்திரசேகரம் அவர்கள்
(உப தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை, யாழ்ப்பாணம்)
பண்டிதர். இ. திருநாவுக்கரசு அவர்கள்
ஆசிரியமணி பண்டிதர் அ. பஞ்சாட்சரம் அவர்கள்
திரு எஸ். ஏ. துரைராசா
(அதிபர், நாவலர் ம. வி)

**பண்ணிசைப்போர்:**
சங்கீதபூஷணம்
சு. கணபதிப்பிள்ளை அவர்கள்
(பிரதிக்கல்விப்பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவரும்)
சங்கீதபூஷணம், பண்ணிசைஅரசு,
ஞானசிரோன்மணி,
நா. வி. மு. நவரத்தினம் அவர்கள்
(தமிழிசைப்புலம், யாழ். பல்கலைக்கழகம்)
சங்கீதபூஷணம்
வி. சிவஞானசேகரம் அவர்கள்
(இடைவரவு விரிவுரையாளர், பண்ணிசைத் துறை, யாழ் பல். கழகம்)

**பக்கவாத்தியங்கள்:**

வயலின்:
'ரஸஞானபூபதி' வீ கே. குமாரசாமி அவர்கள்
இசைக்கலாவித்தகர்
செல்வி. ம. கிருஷ்ணவேணி அவர்கள்

மிருதங்கம்:
மிருதங்க இளவல் ச. நாகராஜன்
மிருதங்கமணி இசையரசு எம்.என் செல்லத்துரை
மிருதங்க இளவல் எஸ். அமல்ராஜ்

கடம்:
செல்வன் சதா. வேல்மாறன்

புல்லாங்குழல்:
வேணுகான இளவல்கள்: ப. பத்மராஜ்
ச. உருத்திரசேகரன்

**குறிப்பு:**
வடஇலங்கைச் சங்கீத சபையின் புதிய பாடத்திற்கமைய பண்ணிசைக் கருத்தரங்கு அமையும்
"வாகீச கலாநிதி"
**கனகசபாபதி நாகேஸ்வரன்,**
அமைப்பாளர்,
திருநெறிய தமிழிசைச் சங்கம்.
யாழ்ப்பாணம்.

30-11-94 (33944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அச்சமும் அர்த்தமும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்காக அரசமைப்பை மாற்றி அமைக்கும்போது, வடக்கு – கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படைச் சரத்துக்களையும் அதில் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இது குறித்து அரசாங்கத் தரப்பில் இருந்து உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் இல்லை. அரசமைப்பைத் திருத்துவது சம்பந்தமாக ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதும், அந்தக் குழு ஆலோசனைகளைக் கோரியிருப்பதுமே உத்தியோகபூர்வமாக அரசு செய்திருக்கும் பணிகள்.

அரசமைப்பை மாற்றும்போது, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அடிப்படை — அத்திவாரம் — இடப்பட வேண்டும் என்பதை இப்பத்தியில் இதற்கு முன்னரே வலியுறுத்தி இருந்தோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்பது தென்னிலங்கையோடு சம்பந்தப்பட்ட விடயம். அரசமைப்பு மாற்றம், தமிழர்களுக்கும் அக்கறைக்குரிய ஒன்றாக மாறவேண்டுமெனில், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அதனை மாற்றுவது என்ற திட்டவட்டமான முடிவுக்கு அரசாங்கம் வர வேண்டும்.

அந்த முடிவை இரகசியமாக வைத்திருக்காமல் வெளிப்படையாக அறிவிக்கவும் வேண்டும். இது விடயத்தில் அரசு ஒளித்து மறைத்து விளையாட நினைக்கக் கூடாது. அதற்கான தேவையும் இல்லை.

அரசமைப்பை மாற்றுவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற இரண்டு விடயங்களையுமே ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமாக அரசு அறிவித்திருந்தது. தேர்தல் பிரசாரமும் முழுக்க முழுக்க அவை இரண்டையும் முன்வைத்தே நடத்தப்பட்டது.

ஆகையால், அரசமைப்பை மாற்றுவது என்பதனை வெளிப்படையாகக் கூறிக்கொள்ளும் அதே வேளை, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அம்சங்களைக் கொண்டதாக அது மாற்றப்படும் என்பதனை மறைப்பதாயின் அதன் அர்த்தம் என்ன?

ஒற்றையாட்சி அரசமைப்பை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்த்திருக்கக் கூடிய காலம் கடந்துவிட்டது. தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்க வகை செய்யும் புதிய அரசமைப்பு அத்தியாவசிய தேவையாக மாறியிருக்கிறது.

எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதுடனேயே, ஒற்றையாட்சி முறையை ஒழிப்பதற்கு ஏற்றவிதத்தில் புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண்டும். தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள மக்களும் ஆணை தந்த பின்னர் அதனை வெளிப்படையாக அறிவிப்பதற்கு என்ன அச்சம்?

அரசாங்கத்துக்கு அத்தகைய அச்சம் ஒன்று இருக்குமானால் அதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒற்றையாட்சி அரசமைப்பை நீக்குவதற்கான மனோபலம் அரசாங்கத்திடம் இல்லை என்பது ஒன்று, ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு மன விருப்பமில்லை என்பது இரண்டாவது!

இவற்றில் பிந்தியது தான் காரணமெனின், சந்திரிகா அரசாங்கத்தின் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற 'விருப்பம்' முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதாகவே முடியும்!

1972, 1978 ஆம் ஆண்டுகளில் அரசமைப்புகள் மாற்றப்பட்டபோது தமிழர்களின் அபிலாசைகளை அப்போதைய சிறிமாவோ, ஜே. ஆர். அரசுகள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதே முன்மாதிரியை சந்திரிகாவும் பின்பற்ற நினைத்தால், படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்றாகிவிடும்!

# அரசின் கட்டுப்பாட்டையும் மீறி
# சீனி விலை 40 ரூபாவாக உயரும்
### தனியார் வர்த்தகர்களின் ஏக போகம் காரணம்

கொழும்பு, டிச. 0

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திடம் தற்சமயம் — சில தினங்களுக்குக் கூட போதாத அளவு — 653 மெற்றிக் தொன் சீனியே கையிருப்பில் உள்ளது.

இந்த கையிருப்பு முடிவடைந்ததும் கொழும்புச் சந்தையில் சீனியின் விலை 40 ரூபாவாக அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீனி வர்த்தகம் ஆறுமுகம், ஈஸ்வரன், டசன்ஸ், யசோதா ஆகிய நான்கு வர்த்தக நிறுவனங்களின் ஏகபோக வியாபாரமாக — அவற்றின் கைகளில் — சிக்கியிருப்பதே காரணம் என்று கூறப்படுகின்றது.

ஒரு மெற்றிக் தொன் வெள்ளைச் சீனி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைய 270 அமெரிக்க டொலரே செலவாகின்றது. இதன்படி ஒரு கிலோ 13 ரூபா 25 சதமே முடிகின்றது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கிலோ 24 ரூபாவுக்கு விற்கப்பட்ட சீனி இப்போது 35 ரூபாவாக விற்கப்படுகின்றது.

சீனியை இறக்குமதி செய்யும் பல்வேறு வர்த்தகர்களிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் அவ்வளவு தொகையையும் மேற்படி நான்கு நிறுவனங்களும் அப்படியே கொள்முதல் செய்து பின்னர் அச்சீனியை அதிக விலைக்கு சந்தைப்படுத்துவதே சீனி விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

சீனியை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுக்கு அவ்வாறு இறக்குமதி செய்யும் சீனியைக் களஞ்சியப்படுத்தி வைக்க வசதியில்லாத காரணத்தினால் அவர்கள் இறக்குமதி செய்யும் சீனியை இக்குறிப்பிட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு மொத்தமாக விற்கிறார்கள்.

கூ. மொ. விற்பனை நிறுவனம் முன்னர் சீனியை இறக்குமதி செய்துவந்தது. அந்நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சீனி இறக்குமதியைக் கைவிட்டதே இந்த நான்கு வர்த்தக நிறுவனங்களும் தன்னிச்சையாக விலையேற்றியதற்கு காரணமாக அமைந்தது.

முன்னாள் ஜனாதிபதியின் சிபார்சின் பேரில் யசோதா வர்த்தக நிறுவனத்திற்கு மக்கள் வங்கி வரையறையின்றிக் கடனை வழங்க முன்வந்தது. இதனால் யசோதா வர்த்தக நிறுவனத்திற்கு எவ்வளவு தொகை சீனியையும் கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றல் உருவானது. தற்போது யசோதா வர்த்தக நிறுவனத்திடம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் சீனியும் ஆறுமுகம் வர்த்தக நிறுவனத்திடம் 4 ஆயிரம் தொன் சீனியும் கையிருப்பில் இருப்பதாகத் தெரியவருகிறது.

சீனி வர்த்தக ஏகபோகத்தில் அரசு தலையிட்டு கூ.மொ.விற்பனை நிலையம், மாக்பெட் போன்ற நிறுவனங்கள் சுதந்திரமாக சீனியை இறக்குமதி செய்யக்கூடிய கொள்கையை அமுல் செய்தால் ஒரு கிலோ சீனியை 20 ரூபாவுக்குக் குறைந்த விலையில் விற்கமுடியுமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ–10)

## வீரசிங்கம் நினைவு தினம்

சண்டிலிப்பாய், டிச. 1

வட பகுதியில் கூட்டுறவு இயக்க தந்தை என்று போற்றப்படுபவரும் முன்னாள் வட்டுக் கோட்டை தொகுதி எம்பியுமான அமரர் வி.வீரசிங்கத்தின் நினைவு தினம் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி அனுட்டிக்கப்படவுள்ளது. மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்றலில் நிறுவப்பட்டுள்ள அமரர் வீரசிங்கத்தின் சிலைக்கு மேற்படி சங்கத்தினர் மலர் மாலை அணிவித்து அவரை கௌரவிக்கவுள்ளதாக அறியப்படுகின்றது. (க–135)

## சிருடைத் துணி

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கான ருசீடைத் துணிகள் கப்பலில் வந்து சேர்ந்துள்ளதாக சுகாதார திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க–17)

## குடை கட்டும் பாவனையில் நகரில் போலி ஆசாமிகள்!

யாழ். நகரில் குடை திருத்தும் பாவனையில் ஏமாற்றுப் பேர்வழிகள் உலா வருகின்றனர். பொது மக்களே கவனம்!

இப்போலி ஆசாமிகள் குடை திருத்தச் செல்பவரிடம் குடையை வாங்கிக்கொண்டு ''கட்டி வைக்கிறேன். நாளை வாருங்கள்'' என்று கூறுவாராம். அடுத்த நாள் சென்று பார்த்தால் ஆளைக் காணமுடியாது அவர் தலைமறைவாகி விடுவார்.

யாழ். நகரில் — பழைய பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வைரவர் கோயிலுக்கு சமீபமாக — இருந்து குடை திருத்துபவராக நடித்த ஒருவரிடம் பலர் குடைகளைக் கொடுத்து ஏமாந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# 12,500 தொன் சீனி அவசரமாக இறக்குமதி!

தனியார்துறை வர்த்தகர்கள் தாங்கள் விரும்பியவாறு சீனியின் விலையை அதிகரிக்க கூடிய நிலை எழுந்திருப்பதாகக் கூறப்படுவதை அடுத்து—

நிலைமையைச் சமாளிப்பதற்கும் சீனியின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குமாக—

அவசர அவசரமாக 12 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சீனியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, உணவு அமைச்சரான கிங்ஸ்லிவிக்கிரமரத்தின இத்தகவலை வெளியிட்டார்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 1

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டு 12, 13 வகுப்புகளுக்கான பொதுப் பரீட்சையின் வினாத்தாள் புள்ளியிடு திட்டம் பற்றிய கலந்துரையாடல் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பௌதிகவியல், தாவரவியல் ஆகிய பாடங்களுக்கான கலந்துரையாடல் இன்றும், விலங்கியல் பாடத்துக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமையும் முற்பகல் 9 மணிமுதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

## வீதியின் அவலநிலை

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் கல்லூரி வீதியில் நீராவியடிக் கேணிக்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விபத்துகள் ஏற்படலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

### அராலி கண்ணி வெடிச் சம்பவம்:
# முந்திய விசாரணை அறிக்கையை கவனத்தில் எடுக்கவேண்டாம்
### கொப்பேகடுவவின் மனைவி அரசிடம் கோரிக்கை

கொழும்பு, டிச. 1

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொலை பற்றி புதிதாக விசாரணை நடத்த அரசு தீர்மானித்திருப்பதை அவரது லலி கொப்பேகடுவ வரவேற்றுள்ளார்.

எனினும் புதிய விசாரணைக்கு முந்திய விசாரணை அறிக்கையை வழிகாட்டியாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவர் அரசைக் கேட்டுள்ளார்.

புதிய அரசு நடத்தவுள்ள புதிய விசாரணை வெற்றி பெற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்,

8-8-1990இல் அராலியில் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் கொப்பேகடுவ உட்பட ஆயுத படைகளின் 9 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

# போலந்திலிருந்து ஆற்றைக் கடந்து ஜேர்மனி செல்ல முயன்ற தமிழர்களுக்கு நேர்ந்த பரிதாபம்!
## 7 நாட்களின் பின்பே சடலங்கள் மீட்பு நால்வரே அடையாளம் காணப்பட்டனர்

இலங்கையில் இருந்து முகவர்களினால் ஜேர்மனிக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர்களில் எட்டுப்பேர் கடந்த ஒகஸ்ட் 27 ஆம் திகதி போலந்தில் இருந்து ஜேர்மனிக்கு ஆறு ஒன்றை நீந்திக் கடக்க முற்பட்ட போது மரணம் அடைந்தனர்.

இவர்களில் நான்கு பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. நால்வர் அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காணப்பட்டவர்களும் அடையாளம் காணப்படாதவர்களும் யாழ்ப்பாணத்தில் புளியங்கூடல், அளவெட்டி, சித்தன்கேணி, யாழ். டேவிட் றோட். மீசாலை, தெல்லிப்பழை, சங்கானை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களின் சடலங்கள் ஏழு தினங்களுக்குப் பின்பே தண்ணீரில் இருந்து மீட்கப்பட்டன.

இறந்தவர்களிடம் போதுமான ஆவணங்கள் இல்லாததால் அவர்களின் சடலங்கள் முழுவதையும் அடையாளம் காணமுடியாது போனதாக போலந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

12 தமிழர்கள் உட்பட 22 பேர் சம்பவதினம் போலந்தில் இருந்து நீந்தி ஆற்றைக் கடந்து ஜேர்மனிக்குள் செல்ல முற்பட்டனர்.

இவர்களில் நான்கு தமிழர்கள் பெரும் ஜீவமரணப் போராட்டம் நடத்தி ஜேர்மன் கரையை அடைய இரு பெண்கள் உட்பட எட்டுத் தமிழர்கள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் போலந்துக் கரையை அடைந்தன.

### உருக்குலைந்த சடலங்கள்

சடலங்கள் உருக்குலைந்து காணப்பட்டதால் போலந்தின் சாறே (Zary) என்ற அரச மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

போலந்து அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டு புதைக்கப்பட்ட நான்கு சடலங்களின் விவரம் வருமாறு:

★ கந்தசாமி சுதர்சன் (வயது – 18) புளியங்கூடல்.

★ சுபத்திரா செல்லையா (வயது–28) அளவெட்டி வடக்கு.

★ இராசையா அருணகிரி (வயது–29) வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி.

★ மோசஸ் அன்ரனி அருமைராஜன் (வயது–30) டேவிட் றோட், யாழ்ப்பாணம்.

அடையாளம் காணப்படாது இறந்திருக்கலாம் என ஊகிக்கப்படும் நால்வர் விவரம்;–

★ கணபதிப்பிள்ளை லம்போதரன் (நாதன் வயது-30) மீசாலை தெற்கு, மீசாலை,

★ பத்மநாதன் தேவகுமார் (யூட்) தெல்லிப்பளை;

★ ஜெயரட்ணம் அலோசியஸ் ஜெயசிங்கம் (அலோசியஸ்) (வயது- 21) சங்கானை.

★ சத்தியரதி (வவா)

போலந்தின் லுப்ஸ்கோ (Lubsko) நகரின் குற்றத் தடுப்புப் பிரிவின் கமிஷனர் டொடிக்கி (Dodicki) தெரிவித்த தகவலின் படி, இறந்தவர்களின் சடலங்கள் போலந்தின் சசிக்கி (Zasieki) என்ற இடக்கில் உள்ள கண்ணீர் சுக்கிகரிப்ப நிலையக் கிவாடிகால்களில் சுங்கிய போது கண்டுபிடிக்கப்பட்டன.

கண்ணீர் சுக்கிகரிப்பு நிலையக்கின் வேலை செய்யும் உத்தியோகத்தர்களால் செப்டெம்பர் முதலாம் திகதி முதலாவது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. செப்டெம்பர் 5ஆம் திகதி கடைசி சடலம் சிக்கியது.

உயிர் தப்பி ஜேர்மன் கரையை அடைந்த நான்கு தமிழர்களும் ஜேர்மனியில் அகதி முகாம் ஒன்றில் வைக்கப்பட்டனர்.

### செய்தியாளர் சந்திப்பு

இவர்களைப் பேட்டி கண்டு தகவல் சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் தெரிவித்ததாவது:

உயிர் தப்பிய நான்கு தமிழர்களில் ஒருவரின் பெயர் விவரங்களைப் பெற்றுக்கொண்டு அவர் தங்க வைக்கப்பட்டிருந்த அகதி முகாமுக்கு நாங்கள் சென்றோம்.

நாங்கள் தேடி வந்தவரின் பெயர் சொன்னதும் மெலிந்த நோய்வாய்ப்பட்டவர் போல் தோற்றமளித்த ஓர் இளைஞனை அழைத்து வந்தனர்.

ஏற்கனவே பீதிபடர்ந்திருந்த அவர் முகம், காரணம் அறிந்ததும் மேலும் கலவரமடைந்தது.

### தப்பிய இளைஞன் தெரிவித்ததாவது

நான் இலங்கையில் இருந்து தமிழ் முகவரின் உதவியுடன் புறப்பட்டு இரண்டு வருடங்கள் மொஸ்கோவிலும் பின் போலந்திலும் நின்றேன். போலந்தில் நான் பாகிஸ்தான் நாட்டவர்களுடனேயே தங்கியிருந்தேன்.

சம்பவம் நடந்த ஒகஸ்ட் 27ஆம் திகதி இரவு கண்ணாடியோ, ஜன்னலோ இல்லாத வான் ஒன்றில் நாங்கள் ஏற்றப்பட்டோம்.

பின் வெவ்வேறு இடங்களில் வான் நிறுத்தப்பட்டு தமிழர்களும், பாகிஸ்தான், பங்களாதேஷ் நாட்டவர்களும் வானில் ஏற்றப்பட்டனர். எங்களுடன் வந்தவர்களில் இரண்டு பெண்கள் உட்பட 12 தமிழர்கள் இருந்தார்கள்.

### இடுப்புவரைதான் ஆழம் என்றனர்

எங்களை அழைத்து வந்த [illegible] தண்ணீரின் ஆழம் இடுப்பு வரைதான் என்று கூறியதை நம்பி இறங்கினோம்.

ஆனால் தண்ணீர் கழுத்துக்கு மேல் வந்துவிட்டது. அந்தத் திடீர் அதிர்ச்சியால் நாங்கள் எல்லோரும் தத்தளித்தோம்.

நான் உட்பட இன்னும் சில தமிழரும் பாகிஸ்தானியர்களும் நீந்தி ஜேர்மன் கரையை அடைந்தோம். இரண்டு பெண்களும், மற்றவர்களும் ஆற்றோடு அள்ளுப்பட்டுச் செல்வதை நான் நேரில் பார்த்தேன்,



ஆற்றைக் கடக்க முற்பட்ட போது உயிரிழந்த எட்டுப் பேரில் ஒருவரான ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த கந்தசாமி சுதர்சனின் சடலம்.

### குளிரில் நடுங்கினோம்

ஈர உடைகளோடு குளிரில் நடுங்கியவண்ணம் காட்டுப் பாதைகளூடாக நடந்துவந்து வாடகைக் கார் ஒன்றை மறித்தபோது, அவன் எங்களை ஏற்றிவந்து பொலீஸாரிடம் ஒப்படைத்துவிட்டான் — இப்படி அவர் கூறினார்.

அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு சம்பவத்தில் உயிர் தப்பியவராகிய மற்றவரைச் சந்திக்கப் புறப்பட்டோம்.

மரங்கள் அடர்ந்து படர்ந்திருந்த காட்டுப்பகுதிக்கு வந்து சேர்ந்தோம். ஹிட்லரின் பாசிச ஆட்சியில் யூதர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களைப் போன்று (Concentration camp) இன்றைய ஜேர்மனியில் அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அது ஒரு பழைய இராணுவ முகாம். நாலாபுறமும் காடு. கிராம எல்லைப் புறத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் ஓர் ஒதுக்குப் புறத்தில் இருந்தது.

அங்கிருந்த அகதிகள் உணவுப் பொருள்கள் வாங்கவோ, அல்லது தொலைபேசியில் கதைக்க வேண்டுமென்றாலோ அந்தக் கிராமத்திற்குத்தான் செல்ல வேண்டும்.

50 தமிழ் அகதிகளுக்கும் ஒரு கட்டடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அறைக் கதவைத் தட்டி உள்ளே சென்ற போது அவர்கள் இரவு உணவை உண்டு கொண்டிருந்தனர்.

''மதிய, இரவு உணவாக ஆளுக்கு இரண்டு துண்டு பாணும், இரண்டு சூஸ்றும், கோப்பியும் தருகிறார்கள். மிக அரிதாகவே சோறு தருகிறார்கள். இந்த உணவு ஒரு போதும் எங்கள் வயிற்றுப் பசியை அடக்குவதில்லை. மேலதிகமாக நாங்கள் ஏதாவது வாங்கி உண்ண விரும்பினால் 6 கிலோ மீற்றர் நடக்க வேண்டும்'' — என்று அங்கிருந்த அகதி ஒருவர் கூறினார்.

27 ஆம் திகதி நடந்த சம்பவம் பற்றிக் கேட்ட போது தப்பி வந்த மற்றும் ஓர் இளைஞர் பின்வருமாறு விரிவாகக் கூறினார்.

### மொஸ்கோவில் 18 மாதங்கள்

'கொழும்பில் உள்ள தமிழ் முகவருக்கு பணம் கட்டிவிட்டு 18 மாதங்கள் மொஸ்கோவில் நின்றேன். தமிழ் முகவர்களுக்கு கீழே வேலை செய்கிற பாகிஸ்தானியர்கள் தான் எங்களை மொஸ்கோவில் இருந்து போலந்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு அழைத்து வந்தார்கள்.

27ஆம் திகதி ஆற்றிற்குக் கிட்ட வந்ததும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த வேகத்தைப் பார்த்ததும் எங்களுக்குப் பயமாகத்தான் இருந்தது. 'தண்ணீரின் ஆழம் இடுப்பளவு தான். எல்லோரும் ஒருவரை ஒருவர் கையைப் பிடித்துக் கொண்டு இறங்குங்கோ' என்று அவர்கள் கட்டளையிட்டனர்.

சிலர் காற்சட்டை, ஜக்கற்றுகளைக் கழற்றிப் போட்டார்கள். கைகளைப் பிடித்துக் கொண்டு இறங்கினோம்.

### எல்லோரும் குளறினோம்

முதலில் இடுப்புவரை இருந்த தண்ணீர் பின் கழுத்துக்கும் மேலாக வந்து விட்டது. தண்ணீரின் பாய்ச்சலும் வேகமாக இருந்தது! அத்துடன் தண்ணீர் கால்களை இழுக்கவும் தொடங்கி விட்டது.

எல்லோரும் பதற்றத்தில் கைகளை விட்டுவிட்டுக் குளறத் தொடங்கினார்கள். இரண்டு தமிழ்ப் பெண்களும், 'ஐயோ அம்மா காப்பாத்துங்கோ' என்று கத்தினார்கள். நான் நீந்த முற்பட்டேன். இரண்டு மூன்று பாகிஸ்தான்காரர்கள் நீந்தத் தெரியாமல் தங்களைக் காப்பாற்றச் சொல்லி தங்களுடைய பாஷையில் கத்திக் கொண்டு என்னைப் பிடித்த வண்ணம் தத்தளித்தார்கள்.

நான் தண்ணீருக்குள் அமுங்கி எழுந்து ஒரு மாதிரி அவர்களிடமிருந்து விடுபட்டு கரைக்கு வந்தேன்.

### எல்லைப் பொலீஸ் வெளிச்சம் அடித்தது

சத்தங்களைக் கேட்ட போலந்து எல்லைப் பொலீஸார் வெளிச்சம் அடித்துப் பார்த்து, சத்த வெடியும் வைத்தார்கள்.

கரையில் களைத்து விழுந்து படுத்திருந்த நான் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தேன். கறுப்புத் தலைகள் தண்ணீருக்குள் தாழ்வதும் மிதக்கிறதுமாக தூரத்தே தண்ணீரோடு அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தன.

போலந்து எல்லைப் பொலீஸார் பார்த்துக் கொண்டே நின்றார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
—இப்படி அவர் கூறினார்.

போலந்தில் இருந்து ஆற்றைக் கடந்து ஜேர்மனி செல்லும் அகதிகள் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தது இந்த ஆண்டில் இரண்டாவது சம்பவம் என்று போலந்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் கமிஷனர் டொடிக்கி தெரிவித்துள்ளார்.

இறந்த தமிழர்களில் அனேகமானோர் எதுவித ஆவணங்களையும் வைத்திருக்கவில்லை என்றும் —

ஜேர்மனி பொலீஸாரால் கைது செய்யப்பட்டால் இலகுவில் அடையாளம் காணப்பட்டு விடலாம் என்பதாலேயே இவர்கள் ஆவணங்களை எடுத்து வருவதில்லை என்றும் டொடிக்கி தெரிவித்தார்.

நன்றி. சரிநிகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யா / கனகரத்தினம் ம. ம. வித்தியாலய வணிக மாணவர் மன்றத்தினரால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்.

1 ஆம் இடம் — 600
2 ஆம் இடம் — 234
3 ஆம் இடம் — 2505

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 450 | 2305 | 640 | 560 | 1414 |
| 791 | 197 | 688 | 2029 | 1634 |

பரிசில்கள் 1995 ஜனவரியில் நடைபெறும் வணிக ஜோதிமலர் வெளியீட்டு விழாவில் வழங்கப்படும்.

(33948)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வெற்றிவேலு அருளம்மா

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திருமதி வெற்றிவேலு அருளம்மா சென்ற சனிக்கிழமை (26-11-94) லண்டனில் காலமானார்.

அன்னார் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை வெற்றிவேலுவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ஓவசியர் பொன்னம்பலத்தின் அருமை மகளும், திருமதி சதாசிவம் சிவக்கொழுந்து (லண்டன்), காந்தி (சாந்திகம், யாழ்ப்பாணம்), கதிரவேலு (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நயினாதீவைச் சேர்ந்த இராமநாதன் சதாசிவம் (பொறியியலாளர் லண்டன்), திருமதி காந்திமதி, திருமதி சந்திரலேகா (அவுஸ்திரேலியா) அவர்களின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற திருமதி நாகராசா சரஸ்வதி, கணேசரத்தினம் (கனடா), சண்முகரத்தினம் (சம்பியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், தேவாம்பிகை, தேவக்குமரன் (லண்டன்), கஜன், பிரியதர்சினி, கிதாஞ்சனா, கிரிஷாந்த், சிவாஞ்சனா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெ காந்தி (மகன்)

43, செட்டித்தெரு,
நல்லூர் ,யாழ்ப்பாணம். (33947)

## சின்னையா பொன்னம்மா

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மூத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னையா பொன்னம்மா 30-11-94இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், இராசம்மா கிருஷ்ணபிள்ளை (வாழைச்சேனை), ஞானம்மா, வைத்திலிங்கம் (யாழ். மார்க்கட்), குழந்தைவேலு (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசங்கரன், காலஞ்சென்ற கனகசூரி, கமலாதேவி, இராசமணி, தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், க. வெற்றிவேலு (யாழ். மார்க்கட்), காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (யாழ். மார்க்கட்), செல்லம்மா, கனகரட்ணம் (புங்குடுதீவு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (01-12-94) இன்று 10-00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்;
க. பாலசந்திரன். (பேரன்)

50, மூத்தவினாயகர் வீதி,
கச்சேரி, நல்லூர்.

(33945)

## திருமதி நவமணி தம்பாபிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம்)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நவமணி தம்பாபிள்ளை 30 . 11 . 94 இல் காலமானார். இவர் க. தம்பாபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர் விக்ரோறியா கல்லூரி)இன் அன்பு மனைவியும் , செல்வி . கணேசலட்சுமி (ஆசிரியர் புனித மரியாள் கல்லூரி திருகோணமலை)மாதுமை (Demonstrator விஞ்ஞானபீடம், தாவரவியல் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 1. 12. 94 காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திரு. க. தம்பாபிள்ளை:

நவமகால்,
கல்வளை,
சண்டிலிப்பாய். (33943)

## சின்னையா கணேசமூர்த்தி

(முன்னாள் யா/ஐக்கிய வியாபாரசங்க முகாமையாளர்)

நவாலி வடக்கைச் சேர்ந்த சின்னையா கணேசமூர்த்தி முன்னாள் யா ஐ. வி ச. முகாமையாளர் 30-11-94 அதிகாலை 3 மணிக்கு காலமானார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகநாதன், உமாபுத்திரன், உமாகாந்தன், நந்தினி, அம்பிகாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனாரும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30-11-94 பிற்பகல் 1 மணிக்கு பிப்பிலி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்பட்டது. இத்தகவல் உரிய நேரத்திற்கு அறிவிக்க முடியவில்லை, எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. சண்முகநாதன் (மகன்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (33950)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம்

## பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

கொழும்பு, டிச. 1

மாவட்ட சேவைத் திட்டத்துக்கு அமைய ஆங்கில ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பரீட்சை கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது.

சுமார் 50 ஆயிரம் பேர் இப்பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

பதவி வெற்றிடங்கள் இல்லாத மாவட்டங்களுக்கு விண்ணப்பம் செய்தவர்களின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டா என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

அத்தகைய பரீட்சார்த்திகள் சுமார் 8ஆயிரம் பேர் இருப்பதாகவும்—

அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## பாடசாலைகளுக்கு இடையேயான

# விளையாட்டு விழா பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு பாடசாலைகளுக்கிடையே இவ் வாண்டு நடத்திய அனைத்து விளையாட்டுப்போட்டிகளுக்குமான பரிசளிப்பு விழா இன்று வியாழன் பிற்பகல் 1-30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஒவ்வொரு விளையாட்டிலும் மாவட்ட அடிப்படையில் முதலாவது இடத்தைப் பெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்குமான வெற்றிக் கிண்ணங்கள் தமிழீழ மாவீரர்களின் நினைவாக வழங்கப்படவுள்ளன,

தமிழீழ விடுதலைப் போரில் முதற் களப்பலியான விடுதலைப் புலிகள் இயக்க வீரர் லெப்டினன்ட் சத்தியநாதன் மற்றும் லெப்டினன்ட் கேணல்களான பொன்னம்மான், இம்ரான், பாண்டியன், ராஜன், சாள்ஸ், குணா, சூட், ஜோய், றேகன், பாமா, மேஜர்களான முரளி, சோதியா, பாரதி, சுகன்யா, யாழிசை, கப்டன்களான வானதி, அமுதினி, பண்டிதர், 2 ஆவது லெப்டினன்ட் மாலதி, ராஜேந்தர் ஆகியோர் நினைவாகவே சுற்று வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். (உ-20)

### விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிச. 1

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் சிறிபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடத்தி வரும் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 1.30 மணி:- சில்வஸ்ரார் "பி" அணி எதிர் றோயல் "பி" அணி.

★ 2.30 மணி:- சில்வஸ்ரார் "ஏ" அணி எதிர் பொற்பதி "பி" அணி.

★ 3.30 மணி யங்றோயல் "பி" அணி எதிர் யங்ஹென்றீஸ் அணி (உ-20)

### 3 கோடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரச்சினை காரணமாக அமைச்சர் தொண்டமான் அரசியல் வட்டாரங்களால் கடுமையாக் விமர்சிக்கப்பட்டு வந்தார்.

"எபர்லங்கா விவகாரம் தனிப்பட்ட பிரச்சினை" — என்று அமைச்சர் தொண்டமான் கூற—

"இது தனிப்பட்ட விவகாரமல்ல. பொதுமக்களின் பணம் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. ஆகவே இது பொதுமக்களின் அக்கறையைப் பெற்றுள்ளது". — என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க பதிலளித்திருக்கிறார். என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது (உஎ)

### ஒற்றையாட்சி .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காமினி திஸாநாயக்கா கடந்த ஒக்ரோபரில் படுகொலையுண்டது பற்றிய விசாரணைகளுக்கு வெடிபொருள் மற்றும் சட்ட மருத்துவ சேவைகளை வழங்கி உதவும்படி இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமாக பதிலளித்துள்ளது என்றும் அவர் சொன்னார் (ஓ எ)

### உணவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, மேற்படி நிலைய உரிமையாளர்கள் எமது உணவுப் பரிசோதகர்களுக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கி அவர்களின் ஆலோசனைப்படி இயங்கியொழுகி, உணவு நிலையங்களின் சுகாதார தரத்தை முன்னேற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### ஆனைப்பந்தி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த துரைராசா இராஜீவன் 471 புள்ளிகளையும், அதே பாடசாலையைச் சேர்ந்த இ. கேதாரசர்மா 466 புள்ளிகளையும் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெறுகின்றனர்.

நான்காவது இடத்தை உடுவில் மகளிர் கல்லூரி, புனித பரி. யோவான் கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் பெறுகின்றனர். (உ)

## ஆசிரியருக்கு இன்னும் சம்பளம் இல்லை

யாழ்.மாவட்ட ஆசிரியர்களின் நவம்பர் மாதத்திற்கான சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதியளவில் வழங்கப்படும் சம்பளக் கொடுப்பனவு மாதம் முடிவடைந்த நிலையிலும் இதுவரை வழங்கப்படாததை ஒட்டி ஆசிரியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

யாழ் கல்வித் திணைக்களத்திற்கு இதற்கான காசோலை இதுவரை வந்து சேராமையே ஆசிரியர்களின் நவம்பர் மாதச் சம்பளம் தாமதத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது (ஓ 4,30)

### புலமைப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின்படி சில முக்கிய பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:

சென்ஜோன் பொஸ்கோவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 207 மாணவர்களில் 67 பேரும் (உச்சப்புள்ளி 179)

யாழ்.இந்த ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றிய 182 மாணவர்களில் 62 பேரும் (உச்சப் புள்ளி 181) —

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றிய 158 மாணவர்களில் 40 பேரும் உச்சப்புள்ளி 180)

ஆனைப்பந்தி அ.மெ பாடசாலையிலிருந்து தோற்றிய 52 மாணவர்களில் ஆறு பேரும் (உச்சப் புள்ளி 151) சித்தியடைந்துள்ளனர்.

பெரியபுலம் ம வியிலிருந்து இருவரும் (உச்சப்புள்ளி 142). இளையதம்பி ம. வி. யிலிருந்து இருவரும் (உச்சப் புள்ளி 155), யாழ். மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையிலிருந்து இருவரும் (உச்சப் புள்ளி (158), நாவலர் ம. விலிருந்து ஒருவரும் (149 புள்ளி) சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கூடிய புள்ளியாக 184 புள்ளிகளை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவர் என். யசிந்தன் பெற்றார். இவர் அகில இலங்கையிலும் மூன்றாவது இடத்தைப் பெற்றார் என்பது தெரிந்ததே.

அடுத்து 183 புள்ளிகளை சாவகச்சேரி மகளிர் ம. வி. மாணவி ஒருவர் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் அனேகமாக இவ்வாரம் முழுப்பாடசாலைகளுக்கும் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-ஐ-9)

### பிரேமா....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படக் கூடும் என்றும் —

ஐ.தே.க. தலைமைப் பணிமனையான "ஸ்ரீ கோத்தா" வின் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்கள வார இதழ்ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நடைபெறவுள்ள நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் கட்சியின் பிரதித் தலைவராக சுசில் முனசிங்காவே அறிவிக்கப்பட வேண்டும் என்றும் —

ஏனைய பதவிகளில் தமது தரப்புக்கு சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும்—

இல்லையேல் —

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்து பதவிகளுக்குப் போட்டியிட தாங்கள் தீர்மானித்துள்ளதாகவும் —

காமினி, பிரேமதாஸா ஆதரவுக்குழுக்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

அவ்வாறு ஏற்படின்பொதுச் செயலாளர் பதவிக்கு டிரோன் பெர்னாண்டோ போட்டியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேமதாஸா காமினி ஆதரவாளர் குழுவிற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த சதாசிவம் மற்றும் சில நாடாளுமன்ற அங்கத்தவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ரணிலுக்கு எதிரான அதிருப்தியாளர்களின் முடிவு கட்சித் தலைமைப்பீடத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்.

இம்முடிவில் மாற்றம் எதையும் செய்ய அவர்கள் தயாராயில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த 19 ஆம் திகதி வெளிநாடு சென்றுள்ள சுசில் முனசிங்கா இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

### மீண்டும்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடக்குவது குறித்து கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்று வருகின்றன என்றும்—

புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான மல்லியின் படுகொலை குறித்து அரசு நீதி விசாரணைக்கு இணங்கியிருப்பது சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகளை சம்மதிக்க வைத்துள்ளது என்றும் —

கூறப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-ஓ-எ-க)

### லலித்.. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்.

முன்னர் லலித்துக்கு காயம் ஏற்படுத்தியவர்களே அவரைக் கொலை செய்தார்களா என்பதையும் —

லலித்துக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டதா என்பதையும் ஆணைக்குழு விசாரிக்கும் என நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார். (உ-3)

### மேஜர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் கவனவீனமாக இருந்தவர் என்று பிரஸ்தாப 21 அதிகாரிகள் மீதும் இராணுவ மன்றம் குற்றச்சாட்டுக்களை அறிவித்துள்ளது.

ஒரு மேஜர் ஜெனரல், நான்கு பிரிகேடியர்கள், ஒரு லெப் கேணல், ஒரு கேணல், 12 கப்டன்கள், ஒரு லெப்டினன்ட் மற்றும் ஒரு இரண்டாம் லெப்டினன்ட் ஆகியோரே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆவர். (ஓ-க)

## எழுதுவினைஞர் பரீட்சை வினாத்தாள்

யாழ்ப்பாணம், டிச 1

எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொது எழுதுவினைஞர் சேவையின் 2 ஆம் வகுப்பு 'ஏ' பிரிவிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை வினாத்தாள்களும் முதலாம் தரத்துக்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சை வினாத்தாள்களும் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. (ஓ-4)

## அடுத்த வருடம் டில்லி செல்வார் சந்திரிகா

கொழும்பு, டிச. 1

புதுடில்லியில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதன் முதலாக வெளிநாடு செல்லவுள்ளார்.

சார்க் அமைப்பின் செயலாளர் இத்தகவலை தெரிவித்தார். (ஓ-6)

## 'குமண' கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம் டிச. 1

குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட 315 தபால் பொதிகள் இன்று வியாழக் கிழமை முதல் விநியோகம் செய்யப்படும் என யாழ் பிரதம தபாலதிபர் திரு எஸ். கோமேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் பருத்தித் துறை துறைமுகத்தில் குமண கப்பலிலிருந்து தபால் பொதிகள் இறக்கப்பட்டு யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ஓ-4-173)

## நாளை

யாழ்ப்பாணம் டிச1

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30மணிக்கு அதிபர் திரு.ந. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (ஓ-4)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.நாச்சிமார் கோயிலடி பிரசாந்தி நிலையக் குழுவினரின் பஜனை இடம்பெறும். பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

## வல்லை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தடயப் பொருளாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே இருப்பதாகவும் உரிய தண்டனை வழங்குமாறும் அரச தரப்பு சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க நீதிபதியை கேட்டுக்கொண்டார்.

எதிரிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவருக்கு கருணை காட்டுமாறு நீதிபதியை கோரினார். (ஐ)


## இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

யாழ். ஸ்ரீதர்
அகலத்திரையில்

தினசரி 2 30, 4.30, 6.30
சனி, ஞாயிறு காலை 10.30, 2.30, 4.30, 6.30

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து

திரைப்படப் பிரிவின்
தயாரிப்பில் உருவாக்கிய

ந. கேசவராசனின்

# பிஞ்சுமனம்

(வண்ண முழுநீளப் படம்)

திரைப்படப் பிரியர்களுக்கு மற்றுமோர் அரிய திரைவிருந்து பிஞ்சுமனம்!

தமிழீழத்திரை வானில் உலாவிவருகின்றது பிஞ்சுமனம்!

தமிழீழ மக்கள் பார்த்து மகிழ பிஞ்சுமனம்!

(சி/9775)

## சயன்ஸ் சென்ரர்
கரவெட்டி

புதிய கல்வியாண்டு
ஆரம்பம்: 3-12-94 சனி காலை 6 மணிக்கு
ஆண்டு 10, ஆண்டு 11, வகுப்புகளிற்கு
A/L 95 வகுப்பிற்கான
இரசாயனவியல்
ஆசிரியர் திரு. சிவசுப்பிரமணியம்
(MR. BHAR)
ஆரம்பம்: 3-12-94 சனி காலை 9 மணிக்கு

## மொடேர்ண் எடியுகேசன் சென்ரர்
கரவெட்டி

புதிய கல்வியாண்டு
ஆரம்பம்: 3-12-94 சனி காலை 9 மணிக்கு
ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 வகுப்புகளிற்கு
A/L 95 பகல் நேர வகுப்பிற்கான
வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 3-12-94
கணக்கியல் – திரு. சரவணபவான் காலை 9 மணி
பொருளியல் – திரு. லோகசிங்கம்

(சி/9777)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org